பொறியியல் கல்லூரி

* 322 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி** : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாநிலத்தில் அரசாங்க அங்கீகாரம் இல்லாமல் எஞ்சினீயரிங் கல்லூரிகள் நடத்தப்படுவது உண்மையா ?

(இ) ஆமெனில், அதைத் தடை செய்யச் சட்டம் ஏதேனும் கொண்டுவரும் உத்தேசமுண்டா ?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) அங்கீகாரம் பெறாத சில கல்வி நிலையங்கள் 'கல்லூரிகள்' என்று தங்களை அழைத்துக் கொண்டு பொறியியல் 'டிப்ளொமாக்கள்' அல்லது 'சான்றிதழ்கள்' கொடுப்பதாகக் கூறி மாணவர்களுக்கு பொறியியல் பாடங்களில் பயிற்சிகள் அளித்து வருகின்றன. இது குறித்து விசாரிக்க அரசாங்கம் குழு ஒன்றை அமைத்துள்ளது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : மே மாதத்திற்குப் பிறகு ஜூன் மாதம் புதிய கல்வி ஆண்டு தொடங்க இருக்கிற காரணத்தால், இந்தக் குழு விசாரித்து அதைத் தடுப்பதற்கு அல்லது முறைப் படுத்துவதற்காக ஒரு சட்டத்தை உடனடியாக கொண்டு வர அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எவ்வளவு சீக்கிரம் அந்தக் கமிட்டி பரிசீலனை செய்து கொடுக்க முடியுமோ, அதைக் கொடுக்கு மாறு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கமிட்டி வந்து சில மாதங்கள்தான் ஆகியிருக்கிறது. இதைச் சீக்கிரமாக செய்ய முயற்சி எடுத்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. சா. கணேசன் : இதுமாதிரி பயிற்சி கொடுக்கிற ஸ்தாபனங் கள் தங்களை கல்லூரிகள் என்று சொல்லிக் கொள்வதோடு மட்டு மல்லாமல் ஏ.எம்.ஐ.ஈ. போன்ற பீ.ஈ.-க்கு நிகரானவை சர்க்கார் உத்தியோகங்கள் பீ.ஈ.-க்குள்ள சலுகைகளோடு கொடுக்கப்படு கின்றன என்றெல்லாம் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப் பட்டு வருவதையும் அரசாங்கம் கவனத்தில் கொண்டு அது சரியா, சரியாக இருந்தால், அப்படி அனுமதிக்கப்படுகிறதா ? அல்லது சரி யல்ல என்று கருதுகிறதா, அப்படி சரியல்ல என்று கருதினால் அதற்கு தடை விதிக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்படுகிறதா ? என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதை எல்லாவற்றையும் ஆராயத்தான் கமிட்டி போட்டிருக்கிறோம். ஏ.எம்.ஐ.ஈ.பி.ஈ.-க்கு சமமானது என்று யூனிவர்சிட்டியாலும், கவர்ன்மெண்டாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் இவர்கள் ஏ.எம்.ஐ.ஈ.-க்கு தகுதியுள்ளவர்களாகச் செய்ய சக்தி படைத்தவர்களா,

17th March 1966]

அதற்கு வேண்டிய பாடப் புத்தகங்கள், லாபரட்டரி, ஃபெசிலிட்டிஸ் ப்ராக்டிக்கல் ட்ரெயினிங் ஃபெசிலிட்டிஸ் இவை எல்லாம் இருக்கின் றனவா என்பது சந்தேகம். அதற்குத்தான் ஏற்பாடு செய்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், இந்தக் கமிட்டியில் யார் யார் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள்? அவர்கள் விசாரணை செய்வதற்கு விடப்பட்டிருக்கின்ற விஷயங்கள் என்னென்ன என் பதை அறியலாமா? 9-00 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதன் அங்கத்தினர்கள்—

(1) Sri T. Muthian, Director of Technical Education.

(2) Sri G. R. Damodaran, Principal, P. S. G. College of Technology, Coimbatore.

(3) Sri V. A. Chandran, Manager, A. S. E. A. Electric Limited, Madras.

(4) Sri K. Sreenivasan, Director, M. I. T., Chromepet.

இவர்களுக்கு விடப்பட்டிருக்கும் விஷயங்கள், காலேஜில் சொல்லிக் கொடுப்பது போல் தாங்களும் டிப்ளமா படிப்பு சொல்லிக் கொடுக் கிறோம் என்று பயிற்சி கொடுத்து வருகின்ற காலேஜ்களைப்பற்றி யும், அவைகளில் கொடுக்கப்படுகின்ற கல்வியைப் பற்றியும் ஆராய்ந்து அதில் ஏற்பட்டிருக்கின்ற குறைபாடுகளைத் தவிர்ப்ப தற்கு என்ன பரிகாரம் என்பதைச் சிபாரிசு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. வை. சங்கரன் : உண்மையிலேயே நல்ல வசதிகளோடு தனியார் காலேஜ்கள் நடத்தி வந்தால், அதை அனுமதிக்கும் விஷயத்திலும் இந்தக் கமிட்டி நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : It is a hypothetical question.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த நுட்பக் கல்விகள் சம்பந்த மாகப் பயிற்சி அளிப்பதற்கு அரசாங்கம் பல கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து பள்ளிகளை நடத்திக் கொண்டிருக் கும் போது, தனியார்கள் இது போன்ற பள்ளிகளை எதற்காக நடத்த வேண்டும்? இதைத் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதைத் தடை செய்ய முடியுமா என்பதையும் ஆராய்ச்சி செய்யவேண்டும் என்று இந்தக் கமிட்டிக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. தடை செய்ய முடியுமானால் சட்டபூர்வமாக எந்த விதத்தில் தடை செய்ய முடியும் என்பதைப் பற்றியும் பரிசீலிக்க வேண்டும்.

திரு. நா. இராசாங்கம் : தலைவர் அவர்களே, இந்தக் குழு ஆராய்ச்சி செய்து முடிவு எடுத்து சர்க்காருக்குத் தெரிவித்த பின்னால் சர்க்காருடைய உசிதம்போல் நடவடிக்கை எடுத்துக்

[17th March 1966

சொள்ளலாம். ஆனுல், அதற்கு முன்னுல் இப்படிப்பட்ட பள்ளிகள் பயிற்சி கொடுத்து சர்டிபிகேட்கள் வழங்குகின்றன, அப்படிப்பட்ட சர்டிபிக்கேட் அரசாங்கத்தில் உலாவுகின்ற போது, அதற்கு என்ன மாதிரியான மதிப்புக் கொடுக்க வேண்டும் என்று ஏதாவது வழிமுறை செய்யப்பட்டிருக்கிறதா ? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது சம்பந்தமாகச் சர்க்காரில் விதிகள் இருக்கின்றன. சர்க்கார் நியமிக்கின்ற பாடமுறையிலேயே அவர்களும் பரீட்சை நடத்தி வருகின்ருர்கள். அதோடு சர்க்காரால் அது அங்கீகரிக்கப்பட்டால் அந்தப் படிப்பை சர்க்கார் ஏற்றுக்கொள்ளும், அங்கீகரிக்காமல் இருந்தால் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

தென்னை மர நோய்த் தடுப்பு ஆராய்ச்சி

***323 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தம்பிக்கோட்டையில் தென்னை மர நோய்த் தடுப்பு ஆராய்ச்சி ஏதேனும் நடத்தப்படுவது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) தஞ்சை மாவட்டம், தம்பிக்கோட்டையில் தென்னை மர வாடல் wilt நோய் ஆய்வுத் திட்டம் 1965, ஜனவரி மாதத்திலிருந்து தொடங்கப்பட்டிருக்கிறது.

(இ) இத் திட்டத்தின்கீழ், இந்த நோய் பரவியுள்ளதையும், அதன் ஊற்றத்தையும் ஆராய்வதற்காக இம் மாநிலத்தில் தென்னை மரங்கள் முக்கியமாக வளர்க்கப்படும் நிலப் பரப்புகளைக் கணக்கெடுக்க எண்ணியுள்ளது. இந்நோய் ஏற்படுவதற்கான காரணங்கள், இந்நோயுடன் தொடர்புள்ள உயிரினங்கள், நோய் காணப்படும் இடங்கள் நோய் பரவியிருப்பது முதலியவை இத் திட்டத்தின் கீழ் ஆராயப்படும். மரவளர்ப்பு முறைகள், காளான் கொல்லி மருந்து தெளிப்பு ஆகிய இருவகைகளிலும் இந் நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் உருவாக்கப்படும். கரிம உரங்களையும் மற்ற உரங்களையும் வெவ்வேறு அளவுகளில் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகளும் ஆராய்ந்தறியப்படும்.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், தென்னை மர நோய்த் தடுப்பு ஆராய்ச்சி நிலையத்திலிருந்து உபகரணங்கள் வேண்டும் என்று கோரி அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் அனுப்பப்பட்டிருக்கிறதா ? அப்படியென்ருல் அந்த உபகரணங்கள் அனுப்பப்பட்டுவிட்டனவா? இல்லையென்ருல் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : உபகரணம் வேண்டும் என்று கேட்ட தகவல் என்னிடம் இல்லை.